# SUNDAY SCHOOL SYLLABUS

# TAMIL

# STANDARD 5

# 1997

## பொருளடக்கம்


1. யோசுவா ஆயி பட்டணத்தைப் பிடித்தது
2. யோசுவாவும் கிபியோனியரும்
3. யோசுவா சூரியனையும் சந்திரனையும் நிறுத்தியது
4. தெபொராள்
5. கிதியோன்
6. சிம்சோன்
7. மோவாபில் ரூத்
8. சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான்
9. சாமுவேல் சவுலை இராஜாவாக அபிஷேகம்பண்ணினது
10. சவுல் இராஜ்யபாரத்தை இழந்தது
11. ஆயக்காரனும் பரிசேயனும்
12. விதைக்கிறவனைப் பற்றிய உவமை
13. கோதுமையையும் களைகளையும் பற்றிய உவமை
14. நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம்
15. திராட்சத்தோட்டத்தின் வேலையாட்கள்
16. சகேயு
17. தாலந்துகள்
18. இயேசு எருசலேமுக்குப் பவனி செல்லுதல்
19. இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவியது
20. கெத்செமனேயில் இயேசு

## பாடம் 1

# யோசுவா ஆயி பட்டணத்தைப் பிடித்தது

யோசுவா 8:1-29

**பொருளடக்கம்:**

1. ஆகான் கொல்லப்பட்ட பின்பு கர்த்தர் யோசுவாவைத் தைரியப்படுத்தி, அவனுக்கு ஆலோசனை கொடுத்தார் (யோசுவா 8:1, 2).

2. யோசுவா முப்பதினாயிரம் யுத்த வீரர்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் பின்பற்ற வேண்டிய முறையை அவர்களுக்கு அறிவித்து, அவர்களை இரவிலே அனுப்பினான். அவர்கள் பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே, ஆயிக்கு மேற்காகப் பதிவிருந்தார்கள் (யோசுவா 8:3-9).

3. அதிகாலமே யோசுவாவும், அவனோடிருந்த யுத்தஜனங்கள் யாவரும் புறப்பட்டுப் போய், ஆயிக்கு வடக்கே பாளயமிறங்கினார்கள். அவன், பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே ஏறக்குறைய ஐயாயிரம் பேரைப் பதிவிடையாக வைத்தான் (யோசுவா 8:10-12).

4. ஆயியின் மனிதர் இஸ்ரவேலருடன் யுத்தம் பண்ணும்படி வந்தபோது, யோசுவாவும் அவனோடிருந்தவர்களும் ஏற்கெனவே திட்டம் போட்டிருந்த முறையைப் பின்பற்றி, ஆயியைக் கைப்பற்றினார்கள் (யோசுவா 8:13-26).

5. இஸ்ரவேலர் அந்தப் பட்டணத்தின் மிருக ஜீவன்களையும், கொள்ளையையும் தங்களுக்கென்று எடுத்துக் கொண்டார்கள். யோசுவா ஆயியைச் சுட்டெரித்து, ஆயியின் ராஜாவை ஒரு மரத்திலே தூக்கிப் போடுவித்தான் (யோசுவா 8:27-29).

**போதனை:**

நாம் கர்த்தருடைய கட்டளைகளைக் கவனமாய் கைக்கொள்வோமாயின், கர்த்தர் நமக்காக யுத்தஞ் செய்து, நமக்கு ஜெயம் தருவார்.

**மனப்பாடம்:** II தீமோத்தேயு 2:5

----------------

## பாடம் 2

# யோசுவாவும் கிபியோனியரும்

யோசுவா 9:1-23

**பொருளடக்கம்:**

1. யோசுவா, தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலரைக் கானானுக்குள் வழிநடத்தினான்.

2. எரிகோவுக்கும் ஆயிக்கும் யோசுவா செய்ததை கிபியோனியர் கேள்விப்பட்டனர். அவர்கள் தந்திரமான யோசனைபண்ணி, கில்காலில் இருக்கிற பாளயத்திற்கு யோசுவாவிடம் போனார்கள் (யோசுவா 9:3-6).

3. கிபியோனியர் தங்களைக் குறித்துக் கொடுத்த விளக்கம் (யோசுவா 9:6-13).

4. யோசுவா அதினால் வஞ்சிக்கப்பட்டு, கர்த்தருடைய ஆலோசனையைக் கேளாமல் கிபியோனியரோடு உடன்படிக்கை செய்தான் (யோசுவா 9:14, 15).

5. பின்பு அவர்கள், கிபியோனியர் தங்கள் அயலார் என்று கேள்விப்பட்டனர் (யோசுவா 9:16).

6. அவர்களுக்கு இட்ட ஆணையினிமித்தம் இஸ்ரவேலர் அவர்களைக் கொன்றுபோடாமல், அவர்களைத் தேவனுடைய ஆலயத்துக்கு விறகு வெட்டுகிறவர்களும், தண்ணீர் எடுக்கிறவர்களுமாக்கினார்கள் (யோசுவா 9:18-23, 27).

**போதனை:**

நாம் ஏதாவது புதிய திட்டங்களில் தைரியமாக ஈடுபடுமுன், தேவனுடைய ஆலோசனையை நாட வேண்டும்.

**மனப்பாடம்:** சங்கீதம் 81:13, 14

---------------

## பாடம் 3

# யோசுவா சூரியனையும் சந்திரனையும் நிறுத்தியது

யோசுவா 10:1-15

**பொருளடக்கம்:**

1. இஸ்ரவேலர் எரிகோவுக்கும் ஆயிக்கும் செய்தவற்றையும், கிபியோனியர் இஸ்ரவேலரோடு சமாதானம் பண்ணிக்கொண்டதையும் எருசலேமின் இராஜாவாகிய அதோனிசேதேக் கேள்விப்பட்டபோது, மிகுந்த பயம் அவனைப் பிடித்துக் கொண்டது (யோசுவா 10:1, 2).

2. அவன் எமோரியரின் வேளு நான்கு இராஜாக்களின் உதவியை நாடி, கிபியோனியர் இஸ்ரவேலருடன் சமாதான உடன்படிக்கை செய்திருந்தபடியால், அவர்களுக்கு விரோதமாக யுத்தஞ் செய்யப் போனான் (யோசுவா 10:3-5).

3. கிபியோனின் மனுஷர், யோசுவா வந்து தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லி அனுப்பினார்கள் (யோசுவா 10:6).

4. யோசுவாவும், அவனோடு கூடச் சகல யுத்த மனுஷரும் சகல பராக்கிரமசாலிகளும் யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள் (யோசுவா 10:7).

5. கர்த்தர் யோசுவாவைத் தைரியப்படுத்திக் கூறிய வார்த்தைகளும், கொடுத்த வாக்குத்தத்தமும் (யோசுவா 10:8).

6. எமோரியர் தோற்கடிக்கப்பட்டு, தங்களைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலருக்கு முன்பாக ஓடிப்போனார்கள். இஸ்ரவேலர் அநேகரைக் கொன்றுபோட்டார்கள். கர்த்தர் கல்மழையை அனுப்பினார். அதினால் இன்னும் அநேக எமோரியர் மரித்தனர் (யோசுவா 10:9-11).

7. யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, சூரியனையும் சந்திரனையும் நோக்கி, 'சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும், தரித்து நில்லுங்கள்' எனக் கூறி, அவைகளுக்குக் கட்டளையிட்டான். இஸ்ரவேலர் சத்துருக்களை அழித்து, அவர்கள் மீது முற்றிலும் ஜெயமெடுக்கும் வரை சூரியன் ஏறக்குறைய ஒரு பகல் முழுவதும் நடுவானத்தில் தரித்தது; சந்திரனும் நின்றது (யோசுவா 10:12-15).

**போதனை:**

நாம் சாதாரணமான, பெலவீனரான மனுஷராயிருக்கலாம்; இருப்பினும், நாம் கர்த்தருடைய சித்தத்தின் மத்தியில் இருந்தால், கர்த்தர் நம் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நமக்காக இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்வார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 96:3, 4

---------------

### பாடம் 4

## தெபொராள்

நியா. அதி. 4

**பொருளடக்கம்:**

1. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தனர். கர்த்தர் அவர்களைக் கானானியரின் ராஜாவாகிய யாபீனுடைய கையில் ஒப்புக்கொடுத்தார் (நியா. 4:1, 2).

2. யாபீனுடைய சேனாபதியாகிய சிசெரா இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் ஒடுக்கினான். இதினிமித்தம் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டனர் (நியா. 4:2, 3).

3. இக்காலத்தில் தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள் (நியா. 4:4, 5).

4. அவள் பாராக்கை அழைத்து, தேவன் சிசெராவை அவன் கையில் ஒப்புக்கொடுப்பார் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவனிடம் பேசினாள் (நியா. 4:6, 7).

5. பாராக், தெபொராள் தன்னோடுகூட வர வேண்டும் என்று அவளை வற்புறுத்தினான்; அவள் அதற்குச் சம்மதித்தாள் (நியா. 4:8, 9).

6. பாராக், செபுலோன் நப்தலி கோத்திரங்களின் ஆதரவைத் தேடினான். அவன் தெபொராளோடும், பதினாயிரம் பேரோடும் யுத்தத்திற்குப் புறப்பட்டான் (நியா. 4:10).

7. சிசெரா தன்னுடைய எல்லா இரதங்களையும், தன்னோடிருந்த எல்லா ஜனங்களையும் ஒன்றாகத் திரட்டினான் (நியா. 4:12,13).

8. கர்த்தர் அன்றுதானே சிசெராவைப் பாராக்கின் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்ற தேவனுடைய திட்டவட்டமான தூதைத் தெபொராள் பாராக்கிற்கு அறிவித்தாள் (நியா. 4:14).

9. சிசெரா யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு, யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடினான் (நியா. 4:15-17).

10. யாகேலுக்கும் சிசெராவுக்கும் இடையில் நடந்த சம்பாஷணை (நியா. 4:18-20).

11. சிசெரா தூங்கிக் கொண்டிருந்தபோது, யாகேலால் கொல்லப்பட்டான் (நியா. 4:21).

12. இவ்விதம் கானானியரின் ராஜாவாகிய யாபீனை, தேவன் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தி, இஸ்ரவேலரை சிசெராவின் ஒடுக்குதலினின்று விடுவித்தார் (நியா. 4:23, 24).

**போதனை:**

தேவனுடைய ஜனங்கள் சத்துருக்களால் ஒடுக்கப்பட்டு, கர்த்தரை நோக்கி முறையிடும்போது, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை எழுப்பி, அவர்களை விடுதலையாக்குகிறார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 50:14, 15

---------------

## பாடம் 5

# கிதியோன்

நியா. 6:1-24, 36-40 ; 7:1-7, 16-25 ; 8:28

**பொருளடக்கம்:**

1. இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்கும்படியாகவும், அவர்களுடைய சத்துருக்களினின்று அவர்களை விடுதலையாக்கும்படியாகவும் தேவனால் எழுப்பப்பட்ட நியாயாதிபதிகளில் கிதியோனும் ஒருவன்.

2. இஸ்ரவேலர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால் தேவன் அவர்களை மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார் (நியா. 6:1).

3. கர்த்தருடைய தூதனானவர் கிதியோனைச் சந்தித்து சம்பாஷித்தது (நியா. 6:11-18).

4. கிதியோன் கர்த்தருடைய தூதனானவருக்கு கொடுத்த ஆகாரம்-இறைச்சியும், புளிப்பில்லா அப்பங்களும் ஆயத்தப்படுத்தி, அதை அவரிடத்தில் கொண்டுவந்து வைத்தான் (நியா. 6:19).

5. தூதனானவர் ஆகாரத்தைத் தமது கையிலிருந்த கோலின் நுனியினால் தொட்டபோது, அக்கினி எழும்பி, அதைப் பட்சித்து (நியா. 6:20, 21).

6. தூதனானவர் மறைந்துபோனார் (நியா. 6:21).

7. கிதியோனின் பயமும் கர்த்தர் அவனைத் தைரியப்படுத்தியதும் (நியா. 6:22, 23).

8. கிதியோன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு ‘யெகோவா ஷாலோம்’ என்று பேரிட்டான் (நியா. 6:24). அதன் அர்த்தம், ‘கர்த்தர் என் சமாதானம்’ என்பதாகும்.

9. கிதியோன் தேவனிடத்தில் கேட்ட அடையாளங்கள் (நியா. 6:36-40).

10. மீதியானியருக்கு விரோதமாகச் சென்ற யுத்தத்திற்கு கிதியோன் ஜனங்களைத் தெரிந்தெடுத்த விதம் (நியா. 7:1-7).

11. யுத்தத்தின் ஒழுங்கும், கர்த்தர் கிதியோனுக்காகவும் அவனுடைய மனுஷருக்காகவும் யுத்தம் செய்ததும் (நியா. 7:16-25).

12. கிதியோன் இஸ்ரவேலரை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தான் (நியா.8:28).

**போதனை:**

முற்றிலுமாய் தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படிகிற ஜனங்கள் கொஞ்சம் பேராயிருந்தாலும், கர்த்தர் அவர்கள் மூலம் பெரிய ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

**மனப்பாடம்:** சங்கீதம் 20:7, 8

---------------

### பாடம் 6

## சிம்சோன்

நியா. அதி. 13 ; 15:20

**பொருளடக்கம்:**

1. சிம்சோனின் பிறப்பிற்கு முன்பு, இஸ்ரவேலர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருடம் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார் (நியா. 13:1).

2. சிம்சோனின் தகப்பன், தாண் கோத்திரத்தைச் சேர்ந்த மனோவா (நியா. 13:2).

3. கர்த்தருடைய தூதனானவர் மனோவாவின் மனைவிக்குத் தரிசனமாகி, சிம்சோனின் பிறப்பை முன்னறிவித்தார். அவளும், பிறக்கப்போகும் பிள்ளையும் கைக்கொள்ள வேண்டிய பிரதிஷ்டையைப் பற்றியும் அவர் அவளுக்குக் கூறினார் (நியா. 13:3-5).

4. இந்த ஸ்திரீ இச்சம்பவத்தைக் குறித்து தன் புருஷனிடம் சொன்னாள் (நியா. 13:6, 7).

5. மனோவா, தன் மனைவிக்குத் தரிசனமானது கர்த்தருடைய தூதனானவர் என அறியாமல், பிறக்கப்போகிற பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும் என அவர்களுக்குக் கற்பிக்கும்படியாக மறுபடியும் அதே தேவமனுஷனை அனுப்ப வேண்டுமென கர்த்தரிடம் வேண்டிக் கொண்டான் (நியா. 13:8).

6. கர்த்தர் மனோவாவின் ஜெபத்திற்குச் செவிகொடுத்தார். அத்தூதனானவர் மறுபடியும் வந்தார் (நியா. 13:9,10).

7. மனோவாவிற்கும் தூதனானவருக்கும் இடையில் நடந்த சம்பாஷணை (நியா. 13:11-14).

8. மனோவா தூதனானவரை போஜனம் பண்ணும்படி அழைத்தான். ஆனால் தூதனானவர், அதற்கு மறுத்து, அவனுக்கு விருப்பமானால் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி செலுத்தும்படி கூறினார். (நியா. 13:15, 16).

9. கர்த்தருடைய தூதனானவரிடம் மனோவா அவருடைய நாமத்தைக் கேட்டதும் அவர் கூறிய பதிலும் (நியா. 13:17, 18).

10. மனோவா கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் செலுத்தினான். பலிபீடத்திலிருந்து எழும்பின அக்கினிஜுவாலையில் தூதனானவர் ஏறிப்போய் மறைந்தார் (நியா. 13:19, 20).

11. மனோவாவின் பயம் - அவன் மனைவி தைரியப்படுத்தினது (நியா. 13:21-23).

12. தூதனானவரால் முன்னுரைக்கப்பட்டபடியே அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு சிம்சோன் என்று பேரிட்டாள். கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்; கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத் துவக்கினார் (நியா. 13:24, 25).

13. பின்னர், சிம்சோன் இஸ்ரவேலரை இருபது வருஷம் நியாயம் விசாரித்த நியாயாதிபதியானான். அக்காலத்தில் பெலிஸ்தரின் கையிலிருந்து தம் ஜனங்களை விடுவிக்கும்படி கர்த்தர் அவனை வல்லமையான கருவியாக உபயோகித்தார் (நியா. 15:20 ; 13:5).

**போதனை:**

ஒவ்வொரு பிள்ளையையும் குறித்து தேவனுக்குப் பெரிதான ஒரு திட்டம் உண்டு. அவருடைய திவ்விய திட்டத்தை நிறைவேற்றும்படியாக, அவருடைய வசனத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளைக் கைக்கொள்ள நாம் கவனமாயிருக்க வேண்டும். அப்படிச் செய்வோமாயின், நாம் பெரியவர்களாகும்போது, தீய வல்லமைகளால் கட்டப்பட்டிருக்கும் ஜனங்களை விடுவிக்கக் கூடியவர்களாயிருப்போம்.

**மனப்பாடம்:** நீதிமொழிகள் 22:6

-----------------

### பாடம் 7

## மோவாபில் ரூத்

### ரூத் 1:1-18

**பொருளடக்கம்:**

1. பெத்லெகேமில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக எலிமெலேக்கும் நகோமியும் தங்கள் இரு குமாரராகிய மக்லோன், கிலியோன் என்பவர்களுடன் என்பவர்களுடன்

பெத்லெகேமை விட்டுப் புறப்பட்டு மோவாபுக்குப் போய் அங்கே சஞ்சரித்தார்கள் (ரூத் 1:1, 2).

2. எலிமெலேக்கு மோவாபில் இறந்து போனான் (ரூத் 1:3).

3. இரு குமாரரும் மோவாபிய ஸ்திரீகளை விவாகம் செய்தனர்; ஆனால் சில காலத்திற்குப் பின் இரு குமாரரும் மரித்தார்கள் (ரூத் 1:4, 5).

4. நகோமி கர்த்தர் தம் ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் எனக் கேள்விப்பட்டு, தன் மருமக்களுடன் மோவாப் தேசத்தை விட்டு பெத்லெகேமுக்குப் போகப் புறப்பட்டாள் (ரூத் 1:6, 7).

5. வழியில் நடந்த சம்பாஷணை - ஒரு மருமகள் ஓர்பாள் திரும்பிப் போனாள்; ஆனால் மற்றொரு மருமகளாகிய ரூத் நகோமியை விடாமல் பற்றிக் கொண்டாள் (ரூத் 1:8-14).

6. ரூத்தின் உறுதியும் அவளது அறிக்கையும் (ரூத் 1:15-18).

**போதனை:**

ரூத் நகோமியைப் பின்பற்றினதுபோல நாமும் கஷ்டங்களிலும் நஷ்டங்களிலுங்கூட பரிசுத்தவான்களைப் பின்பற்றி, அவர்களுடைய ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

**மனப்பாடம்:** பிலிப்பியர் 1:29, 30

--------------

### பாடம் 8

## சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான்

### I சாமு. அதி. 1;3

**பொருளடக்கம்:**

1. பலஸ்தீனாவில் சோப்பீம் என்னப்பட்ட ராமதாயீம் ஊரில் எல்க்கானா என்னும் மனிதன் தன் குடும்பத்துடன் வசித்து வந்தான். அவனுக்கு அன்னாள், பெனின்னாள் என்னும் இரண்டு மனைவிமார் இருந்தார்கள். பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தனர். ஆனால் அன்னாளுக்கோ பிள்ளையில்லாமல் இருந்தது (I சாமு. 1:1, 2).

2. அவர்கள் கர்த்தரைப் பணிந்துகொள்ளும்படியாகவும் அவருக்குப் பலிசெலுத்தும்படியாகவும் வருடந்தோறும் சீலோவுக்குப் போனது (I சாமு. 1:3).

3. அன்னாளுக்குப் பிள்ளையில்லாதிருந்தபடியால் பெனின்னாள் அன்னாளை விசனப்படுத்தினாள். அப்போது எல்க்கானா அவளை ஆறுதல்படுத்தினான் (I சாமு. 1:6-8).

4. அன்னாள் மனங்கசந்து மிகவும் அழுது விண்ணப்பம் பண்ணி, ஒரு பொருத்தனை பண்ணினாள் (I சாமு. 1:10, 11).

5. ஆசாரியனாகிய ஏலி, அவள் மதுபானத்தினால் வெறித்திருக்கிறாள் என அவளைப் பிழையாக விளங்கிக் கொண்டான். ஆனால் அதன்பின்னர் அவன் அவளுடைய மனக்கிலேசத்தை விளங்கிக்கொண்டு அவளை ஆசீர்வதித்தான் (I சாமு. 1:12-18).

6. சாமுவேல் பிள்ளையாண்டானின் பிறப்பு. அன்னாள் தன் பொருத்தனையை நிறைவேற்றினாள் (I சாமு. 1:20-28).

7. பிள்ளையாண்டானாகிய சாமுவேல் கர்த்தருடைய ஆலயத்தில் வளர்ந்தான் (I சாமு. 2:18 ; 3:1).

8. தேவன் சாமுவேலைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு அவனோடு பேசினாா (I சாமு. 3:4-14).

9. சாமுவேல் ஏலிக்குத் தரிசனத்தை அறிவிக்கப் பயந்ததும் பின் அறிவித்ததும் (I சாமு. 3:15-18).

10. சாமுவேல் வளர்ந்தான். கர்த்தர் அவனோடுகூட இருந்தார். சகல இஸ்ரவேலருக்கும் சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று விளங்கினது (I சாமு. 3:19, 20).

**போதனை:**

தேவனுக்குப் பயப்படுகிற பிள்ளைகளுடன் தேவன் பேசுகிறார். நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாயிருந்தால், பிள்ளையாண்டானாகிய சாமுவேலைப்போல, நாமுங்கூட, அவருடைய சத்தத்தைக் கேட்கலாம்.

**மனப்பாடம்:** சங்கீதம் 85:8, 9

---------------

பாடம் 9

# சாமுவேல் சவுலை இராஜாவாக அபிஷேகம் பண்ணினது

**I சாமு. அதி. 8 ; 9:1-21**

**பொருளடக்கம்:**

1. இஸ்ரவேல் புத்திரர் தங்களை ஆளுகை செய்யும்படி ஒரு இராஜாவை ஏற்படுத்த வேண்டுமென்று சாமுவேலிடத்தில் கேட்டனர் (I சாமு. 8:4, 5).

2. இது, சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது. ஆகையால் அவன் கர்த்தரிடம் ஜெபித்தான். கர்த்தர் பதிலளித்தார் (I சாமு. 8:6-9).

3. சாமுவேல் கர்த்தருடைய வார்த்தைகள் எல்லாவற்றையும், அவர்களை ஆளும் இராஜாவின் காரியங்களையும் சொல்லியும், ஜனங்கள் பிடிவாதமாயிருந்தார்கள் (I சாமு. 8:10-20).

4. சவுல் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீஸின் மகன் (I சாமு. 9:1, 2).

5. அவன் தன் தகப்பனின் காணாமற்போன கழுதைகளைத் தேடப் போனான் (I சாமு. 9:3).

6. தேவன் சாமுவேலிடம் சவுலைக் குறித்து முன்னமே கூறியிருந்தார் (I சாமு. 9:15, 16).

7. சாமுவேல் சவுலைச் சந்தித்தபோது, சாமுவேல் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் அவன்மேல் இருப்பதாகக் கூறினான் (I சாமு. 9:20).

8. சவுலின் தாழ்மை (I சாமு. 9:21).

9. சாமுவேல் சவுலை அபிஷேகித்தான் (I சாமு. 10:1).

**போதனை:**

தேவன் சவுலை உயர்த்தியபோது, அவன் தன் தகுதியின்மையை உணர்ந்து, தன்னைத்தானே தாழ்த்தினான். அதுபோலவே, தேவன் நம்மை உயர்த்தும்போது, நாம் தாழ்மையாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**மனப்பாடம்:** மத்தேயு 23:11, 12

---------------

பாடம் 10

# சவுல் இராஜ்யபாரத்தை இழந்தது

**I** சாமு. 11:1-15 **;** 15:1-23

**பொருளடக்கம்:**

1. கீலேயாத்திலிருக்கிற யாபேசுக்கு விரோதமாய் அம்மோனியர் வந்தது (I சாமு. 11:1-5).

2. சவுல் அம்மோனியரோடு யுத்தஞ் செய்து அவர்களை முறியடித்தான் (I சாமு. 11:6-11).

3. சவுலின் இராஜ்யபாரம் ஜனங்களால் உறுதியாக்கப்பட்டது (I சாமு. 11:12-15).

4. அமலேக்கியரைக் குறித்து தேவன் சவுலுக்குக் கொடுத்த கட்டளை (I சாமு. 15:1-3).

5. சவுல் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவர்களை ஜெயித்தான் (I சாமு. 15:4-8).

6. ஆகாக் இராஜாவையும், அமலேக்கியரின் ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும் இரண்டாந்தர மானவைகளையும் ஆட்டுக்குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும் உயிரோடே வைத்ததினால் சவுல் காட்டிய கீழ்ப்படியாமை (I சாமு. 5:9).

7. சவுலை இராஜாவாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் (I சாமு. 15:10, 11).

8. சாமுவேல் சவுலைச் சந்தித்தபோது, சவுல், தான் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றியதாகக் கூறினான். சாமுவேல் தான் கேட்ட ஆடுமாடுகளின் சத்தம் என்ன என்று அவனைக் கேட்டான் (I சாமு. 15:13, 14).

9. சவுலின் சாக்குப்போக்கு (I சாமு. 15:15).

10. சாமுவேல் சவுலிடம், அவன் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே கர்த்தர் அவனை இராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்று கூறினான் (I சாமு. 15:23).

11. கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார். ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப் பண்ணிக்கொண்டிருந்தது (I சாமு. 16:14).

**போதனை:**

நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படியாக, தேவன் நம்மை வைத்திருக்கும் இடத்திலே நிலைத்திருந்து, எப்போதும் அவருடைய கட்டளைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிய வேண்டும்.

**மனப்பாடம்:** I சாமுவேல் 15:22

----------------

பாடம் 11

# ஆயக்காரனும் பரிசேயனும்

**லூக்கா 18:9-14**

**பொருளடக்கம்:**

1. ஆயக்காரர் வரி வசூலிக்கிறவர்களாயிருந்தனர். அவர்கள் அதிகக் கொடூரமுள்ளவர்களாயிருந்து, வரி வசூலிக்கும்போது ஜனங்களை அதிகமாய் ஒடுக்குவார்கள். அவர்கள் நியமிக்கப்பட்ட வரியைக் காட்டிலும் அதிகமான பணத்தை வசூலித்து (லூக்கா 3:12, 13), மற்றவர்களை அநியாயமாய்க் குற்றஞ்சாட்டி பணத்தை எடுத்துக் கொள்வாகள் (லூக்கா 19:8). எனவே அவர்கள் துரோகிகள் என எண்ணப்பட்டனர். மற்றவர்கள் அவர்களை அற்பமாக எண்ணினர். அவர்கள் பாவிகள் எனவும், புறக்கணிக்கப்பட்டவர்கள் எனவும் எண்ணப்பட்டனர் (மத். 9:11).

2. பரிசேயர், பக்திவைராக்கியமுள்ள ஒரு கூட்டம் யூதராவர். அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தோடு அநேக சடங்காச்சாரங்களைச் சேர்த்து, அவற்றைக் கண்டிப்பாய்ப் பின்பற்றினர். அவர்கள் விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும் விரும்பினார்கள் (மத். 23:6, 7). அவர்கள் பார்வைக்காக நீண்ட ஜெபம் செய்வது வழக்கம் (மத். 23:14). அவர்கள் ஒற்தலாம், வெந்தையம், சீரகம் இவற்றில் தசமபாகம் செலுத்துவதில் கவனமாயிருந்தனர்; ஆனால், நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டார்கள் (மத். 23:23). அவர்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்கினர். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும்

நிறைந்திருந்தது (மத். 23:25). இவை, மற்றவர்கள் அவர்களை மாயக்காரர் என்று கருதுவதற்குக் காரணமாயிற்று.

3. இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன் (லூக்கா 18:10).

4. மற்றவர்களை அற்பமாகவும் தன்னை நீதிமானாகவும் எண்ணிய பரிசேயனுடைய ஜெபம் (லூக்கா 18:11, 12).

5. தன்னைத்தான் தாழ்த்தி தேவனுடைய இரக்கத்தின்மீது நம்பிக்கை வைத்து, தான் பாவி என்று ஒத்துக்கொண்டு நருங்குண்ட இருதயத்துடன் ஜெபித்த ஆயக்காரனின் ஜெபம் (லூக்கா 18:13).

6. பரிசேயனல்ல, ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டிற்குத் திரும்பினான் (லூக்கா 18:14).

**போதனை:**

நம் நற்கிரியைகளில் மட்டும் நாம் திருப்தியடையாமல் நம் குற்றங்களை உணர்ந்து, தேவனுடைய இரக்கத்தை நம்பி, அவருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்துவோமேயாயின், அவர் நம்மை நீதிமான்களாக்குவார்.

**மனப்பாடம்:** ரோமர் 3:20 ; தீத்து 3:5

---------------

## பாடம் 12

## விதைக்கிறவனைப் பற்றிய உவமை

மத். 14:3-8, 19-23

**பொருளடக்கம்:**

1. விதைக்கிறவனைப் பற்றிய உவமையில், விதைக்கும்படி புறப்பட்ட ஒரு மனுஷனைப் பற்றி இயேசு கூறினார். அவன் விதைக்கையில், சில விதை வழியருகேயும், சில கற்பாறையான நிலத்திலும், சில முள்ளுள்ள இடங்களிலும், சில நல்ல நிலத்திலும் விழுந்தன (மத். 13:4-8).

2. இந்நான்கு இடங்களும் நான்கு விதமான இருதயங்களைக் காட்டுகின்றன.

(i) வழியருகே - உணர்வில்லாத இருதயம் (மத். 13:19)

(ii) கற்பாறையான நிலம் - ஆழமான தீர்மானமில்லாத இருதயம் (மத். 13:20, 21).

(iii) முள்ளுள்ள இடம் - உலகக் கவலைகளினாலும், ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்படும் இருதயம் (மத். 13:22).

(iv) நல்ல நிலம் - வசனத்தைக் கேட்டு உணர்ந்து பலன் கொடுக்கிற இருதயம் (மத். 13:23).

3. நல்ல நிலம் குறிக்கும் நல்ல இருதயத்தை மூன்றாகப் பிரிக்கலாம் (மத். 13:23).

(i) ஒன்று நூறாய் பலன் கொடுக்கும் இருதயம்;

(ii) ஒன்று அறுபதாய் பலன் கொடுக்கும் இருதயம்;

(iii) ஒன்று முப்பதாய் பலன் கொடுக்கும் இருதயம்.

இம்மூன்றும், நித்தியத்திலுள்ள மூன்று இடங்களாகிய புதிய எருசலேம், புதிய வானம், புதிய பூமி ஆகியவற்றிற்கு மனிதனைக் கொண்டு செல்லும் ஆவிக்குரிய அனுபவற்களைக் காட்டுகின்றன. (வெளி. 21:1, 2).

**போதனை:**

நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்பது மாத்திரமல்ல, அதன்படியே செய்து பலன் கொடுக்கவும் வேண்டும்.

**மனப்பாடம்:** யாக்கோபு 1:22

---------------

பாடம் 13

# கோதுமையையும் களைகளையும் பற்றிய உவமை

மத். 13:24-30, 36-43

**பொருளடக்கம்:**

1. கோதுமையையும் களைகளையும் பற்றி கர்த்தராகிய இயேசு கூறும் உவமை (மத். 13:24-30).

2. இவ்வுவமையில், நல்ல விதை இராஜ்யத்தின் புத்திரரைக் காட்டுகிறது (மத். 13:38).

3. மனுஷகுமாரன் - கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவர் இப்படிப்பட்டவர்களை சிருஷ்டிக்கிறார் (மத். 13:37).

4. இராஜ்யத்தின் புத்திரர் தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே உண்டாக்கப்படுகிறார்கள் (I பேதுரு 1:23).

5. களைகள் - பொல்லாங்கனுடைய புத்திரர். களைகளை விதைக்கிறவன் - பிசாசு (மத் 13:38, 39).

6. அறுப்புக்காலம் - உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் - தேவதூதர்கள் (மத். 13:39).

7. வீட்டெஜமானுக்கும், வேலைக்காரருக்கும் இடையில் நடந்த சம்பாஷனை (மத். 13:27-30).

8. வீட்டெஜமான் சொன்னதுபோல உலகத்தின் முடிவு வரையும் இராஜ்யத்தின் புத்திரரும், பொல்லாங்கனுடைய புத்திரரும் ஒன்றாய் வளருகிறார்கள். கடைசியில் கோதுமையாகிய இராஜ்யத்தின் புத்திரர் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள். களைகளாகிய பொல்லாங்கனுடைய புத்திரர் அழுகையும் பற்கடிப்புமுள்ள அக்கினிச் சூளையில் போடப்படுவார்கள் (மத. 13:40-43).

**போதனை:**

தேவன் நமக்குத் தந்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பிசாசு அழித்துப் போடாதபடிக்கு நாம் விழப்புள்ளவர்களாயிருந்து அவற்றைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**மனப்பாடம்:** வெளிப்படுத்தல் 22:11, 12

---------------

## பாடம் 14

# நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம்

மத். 13:44

**பொருளடக்கம்:**

1. இவ்வுவமையில், ஒரு நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்தைக் கண்ட மனுஷன், அதை மறைத்து, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அந்நிலத்தை வாங்குவதை நாம் காண்கிறோம் (மத். 13:44).

2. மறைவான பொக்கிஷம் - பரலோக ராஜ்யம். அது இயேசுவையும் குறிக்கிறது.

3. பொக்கிஷம், விலையேறப் பெற்றது; மறைந்திருக்கிறது. அதுபோலவே இயேசு விலையேறப்பெற்றவராகவும், உலகத்திற்கு மறைக்கப்பட்டவராகவும் (அறியப்படாதவராகவும்) இருக்கிறார்.

4. இயேசுவை சொந்தமாக்கிக் கொள்வதற்கு அல்லது ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு, ஒருவர் முதலாவது அவரைக் குறித்து அறிந்துகொண்டு, தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**போதனை:**

இவ்வுலகத்தில் சிற்றின்பங்களை நாம் வெறுத்தால், நாம் இயேசுவையும், பரலோக இராஜ்யத்தையும் சுதந்தரித்துக் கொள்ளலாம்.

**மனப்பாடம்:** மத்தேயு 16:26, 27

--------------

பாடம் 15

## திராட்சத்தோட்டத்தின் வேலையாட்கள்

மத். 20:1-16

**பொருளடக்கம்:**

1. திராட்சத் தோட்டத்தின் எஜமான் தன் தோட்டத்திற்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையில் புறப்பட்டான் (மத். 20:1).

2. அவன் சில வேலையாட்களைச் சந்தித்து, நாளொன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி, வேலை செய்யத் திராட்சத்தோட்டத்திற்கு அனுப்பினான் (மத். 20:2).

3. மூன்றாம் மணி வேளையில் அவன் சிலரைக் கண்டு, நியாயமான கூலி கொடுப்பதாகச் சொல்லி, அவர்களையும் தோட்டத்திற்கு அனுப்பினான் (மத். 20:3, 4).

4. ஆறாம், ஒன்பதாம் மணி வேளைகளிலும் அவன் அப்படியே செய்தான் (மத். 20:5).

5. அவன் பதினோராம் மணி வேளையிலும் சும்மா நின்ற வேறு சிலரோடு பேசி, அவர்களையும் திராட்சத் தோட்டத்திற்கு அனுப்பினான் (மத். 20:6, 7).

6. சாயங்காலத்தில் திராட்சத் தோட்டத்தின் எஜமான் காரியக்காரனுக்குக் கொடுத்த கட்டளை (மத். 20:8).

7. வேலையாட்கள் பெற்றுக்கொண்ட கூலி (மத். 20:9, 10).

8. முந்தி வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் முறுமுறுப்பு (மத். 20:11, 12).

9. திராட்சத்தோட்டத்தின் எஜமானனின் பதில் (மத். 20:13-15).

10. இவ்வுவமையின் மூலம் இயேசு வெளிப்படுத்தும் சத்தியம் (மத். 20:16).

**போதனை:**

திராட்சத்தோட்டம் சபையைக் காட்டுகிறது. சபையில் எவ்வளவு காலம் ஊழியஞ் செய்தோம் என்பதைப் பொறுத்தல்ல, நாம் உத்தமமாய் முழு இருதயத்தோடும் சபையில் ஊழியஞ் செய்கிறோமா என்பதை மாத்திரம் கவனித்து தேவன் நமக்குப் பிரதிபலன் அருளுகிறார்.

**மனப்பாடம்:** மத்தேயு 20:16 ; கொலோசெயர் 3:23, 24

--------------

## பாடம் 16

# சகேயு

 லூக்கா 19:1-10

**பொருளடக்கம்:**

1. இயேசு எரிகோவில் பிரவேசித்து அதன் வழியாக நடந்து போனார் (லூக்கா 19:1).

2. எரிகோவில், ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியனுமாயிருந்த சகேயு என்னும் ஒரு மனுஷன் இருந்தான் (லூக்கா 19:2).

3. அவன் இயேசுவைப் பார்க்க விரும்பினான். ஆனால் அவன் குள்ளனாயிருந்தபடியால், அவன் அவரைக் காணமுடியவில்லை (லூக்கா 19:3).

4. இயேசு அவ்வழியே வந்தபோது, அவன் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான் (லூக்கா 19:4).

5. இயேசு அந்த இடத்திற்கு வந்தபோது, அண்ணாந்து பார்த்து, சகேயுவைக் கண்டு ‘நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்’ என்றார் (லூக்கா 19:5).

6. அவன் சீக்கிரமாய இறங்கிவந்து இயேசுவை சந்தோஷத்தோடே அழைத்துக்கொண்டு போனான் (லூக்கா 19:6).

7. ஜனங்களின் முறுமுறுப்பு (லூக்கா 19:7).

8. சகேயுவின் இருதயத்தில் ஏற்பட்ட மாற்றமும், அவனுடைய தீர்மானமும் (லூக்கா 19:8).

9. சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது (லூக்கா 19:9).

10. மனுஷகுமாரன் வந்ததன் நோக்கம் (லூக்கா 19:10).

11. தடைகளின் மத்தியிலும், எப்படியாகிலும் இயேசுவைக் காண வேண்டுமென்ற சகேயுவின் வாஞ்சை, அவனுக்கும் அவன் வீட்டாருக்கும் பெரிதான ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது.

**போதனை:**

நாம் இயேசுவைத் தேடி, அவரைக் காண ஆவலாயிருக்கும்போது, இயேசு நம்மைத் தேடி வந்து நம் சகல தேவைகளையும் நிறைவேற்றுகிறார்.

**மனப்பாடம்:** மத்தேயு 7:7, 8

---------------

பாடம் 17

## தாலந்துகள்

மத். 25:14-30

**பொருளடக்கம்:**

1. புறத்தேசத்திற்குப் பிரயாணமாய் போன ஆஸ்தியுள்ள எஜமான் (மத். 25:14).

2. அவன் தன் ஊழியக்காரர்களுக்குக் கொடுத்த தாலந்துகளின் எண்ணிக்கை (மத். 25:15).

3. ஐந்து தாலந்துகள், இரண்டு தாலந்துகள் வாங்கியவர்கள் அவற்றைக் கொண்டு வியாபாரம் செய்து, முறையே இன்னும் ஐந்து தாலந்துகளும், இரண்டு தாலந்துகளும் சம்பாதித்தனர் (மத். 25:16, 17).

4. ஒரு தாலந்து வாங்கியவன் அதைப் புதைத்து வைத்தான் (மத். 25:18).

5. அவ்வூழியக்காரரின் எஜமான் திரும்பி வந்து, கணக்குக் கேட்டான். அவன் தன் ஊழியக்காரருக்குக் கொடுத்த பிரதிபலனும், தண்டனையும் (மத். 25:19-30).

**போதனை:**

ஒவ்வொருவரும் தேவன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் கிருபைகளைப் பிரயோஜனப்படுத்த வேண்டும். கர்த்தராகிய இயேசு மறுபடியும் வரும்போது, அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாகப் பலன் அளிப்பார்.

**மனப்பாடம்:** மத்தேயு 25:21

--------------

பாடம் 18

## இயேசு எருசலேமுக்குப் பவனி செல்லுதல்

மத். 21:1-16

**பொருளடக்கம்:**

1. இயேச கழுதையின் மேல் ஏறி வருவதைக் குறித்த தீர்க்கதரிசனம் (சக. 9:9).

2. எருசலேமுக்குப் போகும் வழியில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் பெத்பகேயுக்கு வந்தனர் (மத். 21:1).

3. ஒரு கழுதையையும் அதன் குட்டியையும் கொண்டு வரும்படியாக, இயேசு தம்முடைய சீஷர்களில் இரண்டு பேரை அவர்களுக்கு எதிரேயிருந்த கிராமத்துக்கு அனுப்பினார் (மத். 21:1-3).

4. சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கொடுத்திருந்த கட்டளையின்படியே கழுதையையும் குட்டியையும் கொண்டு வந்தார்கள் (மத். 21:6, 7).

5. அவர்கள் இயேசுவைக் கழுதையின்மேல் ஏற்றினார்கள் (மத். 21:7).

6. ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியில் விரித்தார்கள். வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள் (மத். 21:8).

7. பவனியும் 'ஓசான்னா' ஆர்ப்பரிப்பும் (மத். 21:9).

8. எருசலேமுக்குள் பிரவேசித்தது (மத். 21:10).

9. இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசி என நகரத்தின் ஜனங்கள் அறிக்கையிட்டனர் (மத். 21:11).

10. தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (மத். 21:12, 13).

11. இயேசு குருடரையும் சப்பாணிகளையும் சுகமாக்கினார் (மத். 21:14).

12. பிரதான ஆசாரியர், வேதபாரகர் ஆகியோருடைய கோபமும், இயேசு அவர்களுக்குக் கொடுத்த பதிலும் (மத். 21:15, 16).

**போதனை:**

இயேசு இராஜாதி இராஜாவாயிருப்பினும் சாந்த குணமுள்ளவராய் ஒரு கழுதையின் மேல் ஏறி பவனி சென்றார். தம்முடைய பிள்ளைகளும் தம்மைப் போலத் தாழ்மையாகவும், சாந்தகுணமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என அவர் எதிர்ப்பார்க்கிறார்.

**மனப்பாடம்:** பிலிப்பியர் 2:5-8

---------------

பாடம் 19

## இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவியது

யோவான் 13:1-17

**பொருளடக்கம்:**

1. பஸ்கா பண்டிகைக்கு முன்பு, இயேசுவும் அவருடைய சீஷர்களும் போஜனம் பண்ணிக்கொண்டிருந்தனர் (யோவான் 13:1, 2).

2. தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார் என்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும் தேவனிடத்திற்குப் போகிறதையும் குறித்து இயேசு அறிந்திருந்தது (யோவான் 13:3).

3. இயேசு போஜனத்தை விட்டெழுந்து தம்முடைய சீஷர்களுடைய கால்களைக் கழுவினார் (யோவான் 13:4, 5).

4. இயேசுவுக்கும் பேதுருவுக்கும் இடையில் நடந்த சம்பாஷனை (யோவான் 13:6-10).

5. இயேசு சீஷர்களுக்குக் கற்பித்த பாடம் (யோவான் 13:12-17).

6. இயேசு தம் சீஷர்களின் கால்களைக் கழுவியது, அவருடைய மிகுந்த தாழ்மையைக் காட்டுகிறது.

**போதனை:**

ஆண்டவரும் போதகருமாகிய இயேசு, சீஷர்களுடைய கால்களைக் கழுவும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தியதுபோல, நாமும் நம்மைத் தாழ்த்த வேண்டும்.

**மனப்பாடம்:** I பேதுரு 5:5-7

-------------

### பாடம் 20

## கெத்செமனேயில் இயேசு

மத்தேயு 26:39, 42, 44; மாற்கு 14:32-42;
லூக்கா 22:39-46

**பொருளடக்கம்:**

1. இயேசு தம்முடைய சீஷருடன் கெத்சமனேக்குப் போனார் (மாற்கு 14:32).

2. இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டு போய், அவர்களை அங்கே தங்கி விழித்திருந்து ஜெபிக்கும்படி சொன்னார் (மாற்கு 14:33, 34; லூக்கா 22:40).

3. இயேசு அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறம் போய் தனிமையாக ஜெபித்தார் (மாற்கு 14:35, 36; லூக்கா 22:41, 42).

4. வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான் (லூக்கா 22:43).

5. அவர் ஜெபம்பண்ணினபோது அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது (லூக்கா 22:44).

6. அவர் திரும்ப வந்து அவர்களைத் தூங்குகிறவர்களாக் கண்டபோது, விழித்திருந்து ஜெபிக்கும்படி அவர்களுக்கு ஆலோசனைக் கூறினார் (லூக்கா 22:45, 46).

7. அவர் முதல் இரண்டு முறை ஜெபம்பண்ணியது (மத். 26:39, 42).

8. அவர் மூன்றாந்தரமும், அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெயம்பண்ணினார் (மத். 26:44). அவர் திரும்ப வந்தபோது மூன்று சீஷர்களும் மறுபடியும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டார் (மாற்கு 14:39, 40).

9. அவர் மூன்றாந்தரம் வந்து அவர்களோடு பேசினார் (மாற்கு 14:41, 42).

**போதனை:**

இயேசு தம் பிதாவிடம் ஜெபித்ததின் மூலம் பெலனைப் பெற்று, ஜெபம் எடுத்ததுபோல, நாமுங்கூட ஜெபித்து ஜெயமெடுக்க வேண்டும்.

**மனப்பாடம்:** மத்தேயு 26:41; ரோமர் 8:26

---------------